# பெரும்பாணாற்றுப்படையில் தொழில்கள்

***ம. சங்கரி***
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783758

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்க இலக்கியம் என்பது செவ்வியல் இலக்கியங்களில் முக்கியமான ஒன்றாக உள்ளது. இவற்றுள் மிகவும் நீண்ட அடிகளை கொண்ட பாடல்களைக் கொண்டது பத்துப்பாட்டாகும். சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் காலத்தை பொ.ஊ.மு.500 இருந்து பொ.ஊ.200 வரை உள்ள காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியம் ஆகும். சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களை கொண்டுள்ளது. இதில் சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மை தொழில், நிலத்தை உழுது பயிர் செய்தல் தொழில், நாற்று நடும் தொழில், அறுவடை தொழில், நெசவுத்தொழில் என ஒவ்வொரு தொழிலையும் சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களது தொழிலாக மேற்கொண்டிருந்தனர் என்பதை பெரும்பாணாற்றுப்படை வரிகள் மிகவும் நுட்பமான முறையில் இவ்வாய்வு கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *பத்துப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படை, தாழில்கள், விவசாய தொழில் நெசவு.*

## முன்னுரை

*பழங்காலத்தில் மனிதன் இயற்கையாக உணவினை உண்டு வாழ்ந்தான். பின்னர் உணவின் தேவைகள் அதிகரிக்கும் போது தானே உற்பத்தி செய்யும் முறையினை கையாண்டான். காலப்போக்கில் பொன், அணிகலன்கள், இருக்கும் இடம், ஆடை இவற்றின் விலை அதிகரித்து இவற்றைச் செய்வதற்கான நுட்பங்களை அறிந்தவர்கள் இவற்றை தொழிலாகக் கொண்டார்கள். பத்துப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படையில் உள்ள தொழிலை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## தொழில்கள்

*நாம் செய்யும் வேலைகளை தொழில் என்று கூறுகின்றனர். சங்ககாலத்தில் தமிழகத்தில் தொழில்கள் மிகுதியாக இருந்தன. அவை வேளாண்மை தொழில், நிலத்தை உழுது பயிர் செய்தல் தொழில், நாற்று நடும் தொழில், அறுவடைத் தொழில் என பல வகையான பயிர்கள் செய்யும் தொழில், நெசவுத்தொழில் ஆகியவை தமிழ்நாட்டில் காணப்படும் முக்கிய தொழில்களாகும்.*

*தொழிலை ஆண்களுக்கு உயிராக மதித்துப் போற்றினர் என்பதை*

***“வினையே ஆட வர்க்கு உயிரே”'***

*என்னும் குறுந்தொகை பாடல் நிரூபிக்கிறது.*

## பெரும்பாணாற்றுப்படையில் தொழில்கள்

### வேளாண்மைத் தொழில்

*மனித வாழ்விற்கு இன்றியமையாதது உணவு. மனிதன் நல்லதொரு பண்பினைப்பெற அடிப்படையாய் அமைவது வறுமை இன்மையே. உழவு என்னும் சொல் வேளாண்மை என்றும் விவசாயம் என்றும் கமம் என்றும் உணவுக்காகவும் ஏனைய பயன்பாடுகளுக்காகவும் சில வகை பயிர்களை உற்பத்தி செய்வதையும் கால்நடை வளர்ப்பதையும் குறிக்கும்.*

*வேளாண்மை என்பது முக்கியமான முதல் நிலை தொழிலாகும். ‘உணவு இன்றேல் உயிர் இல்லை’ என்பதனை அறிந்த பண்டைய தமிழர்கள் பயிர்த்தொழிலைப் பெருக்கினர். வேளாண் மாந்தர்கள் பயிர்த்தொழிலைத் தவிர வேறு தொழில்கள் செய்வதில்லை என்பதனை,*

***“வேளாண் மாந்தர்க்கு உழுதுஊன் அல்லது
இல்என மொழிப பிறவகை நிகழ்ச்சி”*[3]**

*என்னும் தொல்காப்பிய நூற்பா தெளிவுபடுத்துகிறது.*

*எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையிலும் வேளாண்மை என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. மேலும் இதனை,*

***“கேளாளன் ஆகாமை இல்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்”*[2]**

*என்ற வரிகள் வேளாண்மை பற்றி சொல்கிறது.*

**உழவு**

*பண்டைத் தமிழர் உழவுத் தொழிலை கலப்பையைக் கொண்டு நிலத்தை உழுது பயிர் செய்தனர் என்பதற்கு,*

***“குறிஞ்சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பரைந்த புகைசூழ் கொட்டில்”***

***- (பெரு.வ.188.189)***

*என்னும் பாடல் அடிகள் நன்றாக விளக்குகிறது. மேலும் இவ்வடிகளை நாம் ஆராயும் பொழுது கலப்பையோடு உருளை கருவியை பயன்படுத்தி உள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.*

**நாற்று நடும் தொழில்**

*பண்டைக் காலத்தில் விவசாயம் என்றால் என்ன என்பதே தெரியாத மனிதர்கள் காடுகளில் தானாக விளைந்த பொருட்களை உணவாக பயன்படுத்தினர். அதைத்தொடர்ந்து அவர்கள் சிந்திய உணவுப் பொருள்களில் எச்சங்கள் மண்ணில் மீண்டும் பயிறாக விளைந்ததை வினோதமாக பார்த்தனர். பரிணாம வளர்ச்சியால் நாளடைவில் மண்ணில் உணவு தானியங்கள் விதைக்கும் முறையை கண்டறிந்தனர் இதிலிருந்து தான் பயிர் சாகுபடி என்ற தொழில் உருவானது. கொல்லனுடைய கோழற்றை ஒத்த கவர்த்த காலைவுடைய நண்டின். வளைகள் எல்லாம் சிறையும்படியாக, பசிய கோதையைக் குத்திக் கோட்டு மண் கொண்ட காரேறுகள், தம்முள் போரிட்டமையால் சேறாகிய வயலின் கண், அந்தச் சேற்றை சமம்பட மிதித்த உழவர்கள் முடிநாற்றை நடுகின்றனர்.*

***“..........மென் தோல்
மிதிவிலைக் கொல்லன் முடி கொடிற்றன்ன
கவைத்தாள் அலவன் அளற்றுஅளை சிதைய,
பைஞ்சாய் கொன்ற மண்படு மறுப்பின்
கார்ஏறு பொருத கண்அகன் செறுவின்
உழாஅ நுண்தொழில் நிர்விய வினைஞர்
முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்”***

***- (பெரு.260-212)***

*என்னும் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. மேலும் நாற்று நடுதல் பற்றி*

***“நன்றாங்கால் நல்லவாக் காண்பவர்
அன்றாங்கால் அல்லற் படுவ தெவன்”*[4]**

*என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.*

**அறுவடைத் தொழில்**

*நெற்பயிர் சாகுபடியை செய்ய சுமார் 4 முதல் 5 மாதங்களாகும். எவ்வளவு நெருக்கடியான சுமைகளையும் பொறுத்துக் கொண்டு விவசாயிகள் நெற்சாகுபடியை செய்து வருகிறார்கள். முப்போகம் விளைவித்த காலங்கள் மாறினாலும், குறைந்தபட்சம் ஒரு போகம் நெற்பயிற் சாகுபடி பெரும்பாலான விவசாயிகள் மேற்கொள்கிறார்கள். நெற்களை சுத்தம் செய்து நெற்கூடுகளில் இட்டு வைப்பர். அந்நெற்கூடானது ஏணிக்கும் எட்டாத அளவு மிகப்பெரிய வடிவுடன் மேல் பகுதி திறந்து நெல்லை கொட்டுவதற்கு ஏற்றார் போல் இருக்கும் என்பதை,*

***“வையும் துரும்பும் நீக்கி பைது அற
குடகாற்று எறிந்த குப்பை, வடபால்
செம்பொன் மலையின்”***

***- (பெரும்.238-240)***

*என்னும் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. இன்றைய அறிவியல் உலகில் இதுபோன்ற நெற்குகளை பார்ப்பது மிகவும் அரிதாகவே உள்ளது.*

**பல வகையான பயிர் தொழில் செய்தல்**

*நெற்பயிரை மட்டுமல்லாது பெரும்பாணாற்றுப்படையிலுள்ள உழவர்கள் வரகு எள் தென்னை அவரை கரும்பு மிளகு மஞ்சள் போன்ற பல பயிர்களையும் பயிர் செய்துள்ளனர் என்பதை,*

***"நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன,***
***குறுந்தாள் வரகு"***

***- (பெரும்.192-193)***

*என்னும் வரிகளில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பதிவு செய்துள்ளார். இத்தகைய தலையாய தொழில் செய்த உழவர்கள் வாழ்ந்த பகுதியாக மருத நிலம் அமைகின்றது.*

**நெசவுத்தொழில்**

*நெசவுத் தொழில் நுட்பம் அல்லது நெசவுத்தொழில் இது மக்கள் பயன்படுத்தும் உடுத்தும் உடையான பால் ஆடை, படுக்கை, விரிப்பான பாய், கம்பளம் மற்றும் சாக்கு உற்பத்தி செய்வதற்கு உதவும் நுட்பமாகும். ஒவ்வொரு தொழிலிலும் அதன் மூலப் பொருட்கள் அதிகமாக கிடைக்கும் பகுதிகளில் புகழ்பெற்றிருக்கும்.*

*உணவினை அடுத்து சமூகத்திற்கு இன்றியமையாதது உடை. பலரது கூட்டு முயற்சியால் உருவானதே நெசவுத்தொழில். இதில் நேர்த்தியாக துணி நெய்யப்பட்டது என்பதை,*

***"அடிபுதை அரணம் எய்தி, படம்புக்கு***
***பொருட்கணை தொலைச்சிய புண்தீர் மார்பின்,***
***விரிவுவரிக் கச்சின் வெண்கை ஒள்வாள்."***

***- (பெரும்-68-71)***

*என்னும் வரிகள் மூலம் அறியலாம். மேலும்,*

***"ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்"***

***- (பெரும்.469)***

*என்ற வரியின் மூலம் பெண்கள் ஆவி போன்ற மென்மையான ஆடைகளை அணிந்திருந்தனர் என்பதை வைத்து ஆராயும் போது நெய்தல் தொழில் இருந்தது என்பதை அறிய முடிகிறது.*

**முடிவுரை**

*பழங்காலம் தொட்டே இந்த வர்க்க வேறுபாடு இருந்ததையும் சுட்டிக்காட்டிய பாவேந்தர் தமது படைப்பின் தன்மையில் தொழில்களை பிரித்தனர். ஆநிரைகளை வளர்தலையும் சிறப்பான ஒரு தொழிலாக செய்து வந்தனர். உழவுத் தொழில் முதலிடம் வகித்தன.*

*உழவுத் தொழில் செய்யும் மருதநில வாழ்வு மையப்படுத்தப்பட்டு பிறநில வாழ்வு அதை நோக்கியதாக மாற்றி அமைக்கப்பட்டது.*

*உழவர்கள் விருந்தோம்பலை தலையாய கடமையாக கொண்டிருந்தனர் நாற்று நடும் தொழில், அதனை அறுவடை செய்யும் தொழில், பல வகையான பயிர் தொழில்கள் செய்தல், நெசவுத்தொழில் என பலவகையான தொழில்களை மேற்கொண்டிருந்தனர் அக்கால மக்கள்.*

**சான்றெண் விளக்கம்**


1. *புலியூர்கேசிகன், குறுந்தொகை, பா. எ. 135.*
2. *சுப்பிரமணியன். ச. வே. அறியுர், சங்க இலக்கியம் எட்டுத்தொகை கலித்தொகை, பா.எ.101.*
3. *திருஞானசம்பந்தம். ச. முனைவர், தொல். பொரு. நூ. எ. 625.*
4. *செந்தமிழ்செழியன்.கவிஞர், பேராசிரியர், திருக்குறள், குற. எ. 379.*

**துணை நூற்பட்டியல்**

*1. திருஞானசம்பந்தம். ச. முனைவர் - தொல் பொருள், கதிர்பதிப்பகம், 93, தெற்கு வீதி, திருவையாறு - 613 204.*

*2. சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் எட்டுத்தொகை தெகுதி 2 கலித்தொகை, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை - 600108.*

*3. செந்தமிழ்ச் செழியன் - திருக்குறள், சக்தி பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை - 600 013.*

*4. புலியூர்கேசிகன் - குறுந்தொகை முத்தமிழ் பதிப்பகம், 9 அ, மேக்மில்லன் காலணி, நாகை நல்லூர், சென்னை - 600 061.*